# தாழ்மை - இயேசு

ஆண்டவர் இயேசு இவ் உலகில் வாழுங் காலத்தில் தன்னுடன் சேர்ந்து திருப்பணி செய்வதற்காக பன்னிரண்டு பேரை தெரிவு செய்திருந்தார். அவர்கள் அவருடன் பல்வேறு இடங்களுக்குச் சென்று பணி செய்தனர். இயேசுவின் தலைமைத்துவத்தின் கீழ் அவர்கள் பணிவுடன் செயல்பட்டு வந்தனர். அவருடைய வாழ்க்கை முன் மாதிரிகளைப் பின்பற்றினர். ஆதன் மூலமாக நல்வழிகளைக் கற்றுக் கொண்டனர்.



ஆண்டவர் இயேசு ஒரு நாள் அதாவது இவ்வுலக வாழ்வின் இறுதிக் கால கட்டத்தில் புதுமையான செயல் ஒன்றில் ஈடுபட்டார். ஒரு பாத்திரத்தில் நீர் நிரப்பி சீடர்களின் கால்களைக் கழுவி துணியால் துடைத்தார். மிகத் தாழ்மையான செயலை செய்தார். சீடர்கள் இதன் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டனர். அனைவருக்கும் பணி செய்வதற்காக ஆண்டவர் இயேசு தன்னை முழுவதுமாக அர்ப்பணித்து இருந்தார். இந் நிகழ்வினூடாக இதனை நாம் அறிந்து கொள்ளலாம்.

சிறுவர்களாகிய நாம் எமது பெற்றோர், ஆசிரியர், வயோதிபர் போன்றோரிடம் உதவிகள் பெற்று வாழ்கின்றோம். அதே போன்று நாமும் ஒருவருக்கொருவர் பணிசெய்வதற்கு பழக வேண்டும்.

## செயற்பாடு

1. நீங்கள் ஏனையவர்களுக்கு செய்யக்கூடிய பணிகள் (தொண்டுகள்) சிலவற்றை எழுதுக.
2. தாழ்மை நிறைந்த பணியின் அர்த்தமென்ன?